67 தரமற்ற மருந்துகள்: ஆய்வில் கண்டுபிடிப்பு

சென்னை, ஏப். 22: மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 67 மருந்துகள் தரமற்றவை என கண்டறியப்பட்டதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது. அவற்றில் ஒரு மருந்து தவறான வர்த்தக பெயருடன் விற்பனைக்கு இருந்ததும் தெரியவந்துள்ளது.

அந்த மருந்துகளில் பெரும்பாலானவை மேற்கு வங்கம், ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் தயாரிக்கப்பட்டவை. நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகை மருந்து - மாத்திரைகளும் மத்திய மற்றும் மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன.

அதேபோன்று போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் 931 மருந்துகளின் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் வலி, காய்ச்சல், ஜீரண மண்டல பாதிப்பு, சளித் தொற்று, கிருமித் தொற்று, வைட்டமின் குறைபாடு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 67 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அதன் விவரங்களை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் cdsco.gov.in என்ற இணையப் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மருந்து கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரதிஷ்டை தின மகோத்சவம்...

சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தில், திருமயிலை திருவேங்கடமுடையான் பிரதிஷ்டை செய்யப்பட்ட மகோத்சவ விழாவில் திங்கள்கிழமை 100 நாகஸ்வர- தவில் இசைக்கலைஞர்களின் மங்கல வாத்தியங்கள், வாண வேடிக்கைகளுடன் நடைபெற்ற திருவீதி புறப்பாடு.

மயிலாப்பூரில் மின் தடை: பொதுமக்கள் போராட்டம்

சென்னை, ஏப்.22: சென்னை மயிலாப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு மின்தடை ஏற்பட்டதால், பொதுமக்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலாப்பூர் திருவள்ளுவர் தெரு, கணேசபுரம், திருவீதி அம்மன் தெரு உள்ளிட்ட இடங்களில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நீண்ட நேரமாகியும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

இதனால், ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் நள்ளிரவு 12.30 மணியளவில் ராயப்பேட்டையில் உள்ள மின்வாரிய அலுவலகம் எதிரே சாலையில் அமர்ந்து முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, சீரான மின் விநியோகம் வழங்கும்படி முழக்கமிட்டனர். தகவலறிந்து அங்கு விரைந்து வந்த போலீஸார், பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேலும், அந்த பகுதியில் மின் விநியோகம் வழங்குவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதையடுத்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு, கலைந்து சென்றனர்.

பூமியைக் காப்போம்!

உலக பூமி தினத்தையொட்டி(ஏப்.22) 'மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்! பூமியை காப்போம்' என்பதை வலியுறுத்தி சென்னை அண்ணாநகர் வள்ளியம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் திங்கள்கிழமை நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சி.

கோயம்பேடு சந்தையில் புறக்காவல் நிலையத்தை திறக்க வியாபாரிகள் கோரிக்கை

சென்னை, ஏப்.22: சென்னை கோயம்பேடு சந்தையில் பூட்டிக்கிடக்கும் புறக்காவல் நிலையத்தை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோயம்பேடு காய்கறி சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆந்திரம், கர்நாடகம் , கேரளம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் காய்கறிகள், பழங்கள் கீரை வகைகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இதை வாங்கிச்செல்ல சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து சிறு வியாபாரிகள், பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்கின்றனர். இதனால், கோயம்பேடு சந்தையில் மக்கள் கூட்டம் எப்போது அதிகமாகவே காணப்படும். குறிப்பாக அதிகாலை நேரங்களில் சில்லறை வியாபாரிகளின் வருகையால் சந்தை நெரிசல் மிகுந்து காணப்படும். இவர்களின் பாதுகாப்புக்காக கோயம்பேடு சந்தை வளாகத்தில் புறக்காவல் நிலையம் அமைக்கப்பட்டது.

இங்கு 24 மணிநேரமும் சுழற்சி முறையில் போலீஸார் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், கடந்த சில மாதங்களாக கோயம்பேடு சந்தை வளாகத்தில் உள்ள புறக்காவல் நிலையம் பூட்டியே கிடப்பதால் கைப்பேசி, இருசக்கர வாகனம் உள்ளிட்டவற்றை திருடும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இது குறித்து கோயம்பேடு சந்தை வியாபாரிகள் கூறியது:

கோயம்பேடு சந்தையில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி வியாபாரிகள், பொதுமக்களிடமிருந்து பணம், கைப்பேசி மற்றும் இருசக்கர வாகனத்தை சிலர் நோட்டமிட்டு திருடி வருகின்றனர்.

புறக்காவல் நிலையம் செயல்படும் போது, போலீஸார் அவ்வப்போது ரோந்து பணி மேற்கொள்வார்கள். இவர்களுக்கு பயந்து பெருமளவில் திருட்டு நடைபெறாமல் இருந்தது.

ஆனால், சமீபகாலமாக புறக்காவல் நிலையம் செயல்படாமல் பூட்டிக்கிடப்பதால்திருட்டில்ஈடுபடும்நபர்கள்எந்தவிதபயமும்இன்றி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், பூட்டப்பட்ட நிலையில் கிடக்கும் புறக்காவல் நிலையத்தை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

சென்னையில் ஈரானிய திரைப்பட கண்காட்சி

சென்னை,ஏப்.22: ஈரான்நாட்டின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் விதமாக 'ஈரானிய திரைப்படக் கண்காட்சி' சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் திங்கள்கிழமை தொடங்கியது.

இந்தோ சினிமா அறக்கட்டளை சார்பில் 'ஈரானிய திரைப்படக் கண்காட்சி' தொடக்க விழா சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்றது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தில் ஏப். 22, 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெறும் இந்தக் கண்காட்சியை ஈரான் கலாசார மையத்தின் இயக்குநர் முகமது ரேசா பாசெல் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: உலக சினிமா தளத்தில் ஈரான் மிகவும் முக்கிய பங்கை வகிக்கிறது. திரைத் துறைக்கு பல சிறந்த படைப்புகளையும் வழங்கியுள்ளது.

ஈரானிய சினிமா பெரும்பாலும் குடும்ப கதைகள் சார்ந்தவையாகவே இருக்கும்.

ஆனால் அவற்றில் கூறப்படும் மனிதாபிமான கருத்துகள் கவிதைகளுக்கு இணையானவை.

ஈரான் நாட்டில் 'ஃபாஜ்' எனும் திரைப்பட விழா ஆண்டுதோறும் நடைபெறும்.

ஈரான் நாட்டின் கலாசாரத்தை பற்றி புரிந்து கொள்ள இந்திய மக்கள் ஒரு முறையாவது அந்தக் கண்காட்சியை நேரில் வந்து பார்க்க வேண்டும் என்றார்.

திருவண்ணாமலைக்கு இன்று சிறப்பு ரயில்

சென்னை, ஏப்.22: பௌர்ணமி கிரிவலத்தையொட்டி சென்னை கடற்கரையிலிருந்து திருவண்ணாமலைக்கு செவ்வாய்க்கிழமை (ஏப்.23) சிறப்பு மெமு ரயில் இயக்கப்படவுள்ளது.

தெற்கு ரயில்வே சென்னை கோட்டம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

பௌர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு பக்தர்களின் வசதிக்காக சென்னை கடற்கரை - வேலூர் கண்டோண்மெண்ட் இடையே இயங்கிவரும் மெமு ரயில் செவ்வாய், புதன்கிழமைகளில் (ஏப்.23,24) திருவண்ணாமலை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,ஏப்.23-இல்மாலை 6 மணிக்கு கடற்கரையிலிருந்து புறப்படும் மெமு சிறப்பு ரயில் (எண்: 06033) நள்ளிரவு 12.05 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும். மறுமார்க்கமாக இந்த ரயில் (எண்: 06034) ஏப்.24-இல் திருவண்ணாமலையிலிருந்து அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு காலை 9.50 மணிக்கு கடற்கரை வந்தடையும்.

இந்த ரயில் கடற்கடையிலிருந்து வேலூர் கண்டோண்மெண்ட், கணியம்பாடி, கண்ணமங்கலம், போளூர், அகரம் சிப்பந்தி, துரிஞ்சாபுரம் வழியாக திருவண்ணாமலை சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7,500 தனியார் பள்ளிகளில் 1.10 லட்சம் இடங்கள்

இலவச சேர்க்கைக்கு விண்ணப்பப் பதிவு தொடக்கம்

சென்னை, ஏப். 22: தமிழகத்தில் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சேர்க்கை பெறுவதற்கான விண்ணப்பப் பதிவு திங்கள்கிழமை முதல் தொடங்கியது. இந்தத் திட்டத்தின் கீழ் 7,500-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் 1.10 லட்சம் இடங்கள் உள்ளன.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009-இன் கீழ் தமிழகத்தில் தனியார் பள்ளிகள் மற்றும் சிறுபான்மையற்ற தனியார் பள்ளிகள், சுய நிதி பள்ளிகளில் கட்டாயக் கல்வி சட்டத்தின் கீழ் வாய்ப்பு மறுக்கப்பட்ட, நலிவடைந்தோரின் குழந்தைகளுக்கு எல்கேஜி அல்லது ஒன்றாம் வகுப்புகளில் 25 சதவீத இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் அரசால் ரூ.400 கோடி தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில்,2024-2025-ஆம் கல்வியாண்டுக்கான சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு இணையவழியில் (https://rte.tnschools.gov.in) திங்கள்கிழமை தொடங்கியுள்ளது.

இதையடுத்து, இந்தத் திட்டத்தின் கீழ் தங்களது குழந்தைகளுக்கு சேர்க்கை பெற விரும்பும் பெற்றோர்கள் மே 20 வரை விண்ணப்பிக்கலாம்.

சேர்க்கைக்கு இணையதளம் மூலமாகவும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், வட்டார அலுவலகத்துக்கு நேரில் சென்று விண்ணப்பிக்கலாம்.

எல்கேஜி வகுப்பில் சேருவதற்கு குழந்தைகள் 1.8.2020 முதல் 31.7.2021-க்குள் பிறந்திருக்க வேண்டும். முதல் வகுப்பில் சேரவுள்ள குழந்தைகள் 1.8.2018 முதல் 31.7.2019-க்குள் பிறந்திருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்களின் வீடுகளில் இருந்து 1 கிலோ மீட்டருக்குட்பட்டு அமைந்திருக்கக் கூடிய தனியார் பள்ளிகளுக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கலாம். ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பப்பதிவு வெற்றிகரமாக முடிந்ததும் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம், பெற்றோரின் கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் என்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 7,500 பள்ளிகளில் 1.10 லட்சம் இடங்கள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நிலுவைத் தொகை எப்போது?: முன்னதாக, கடந்த ஆண்டுகளில் சேர்க்கை பெற்ற குழந்தைகளுக்கு அரசின் சார்பில் வழங்க வேண்டிய தொகை நிலுவையில் இருந்ததால் வரும் கல்வியாண்டில் இலவச சேர்க்கை வழங்க மாட்டோம் என தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகள் சங்கம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், நிலுவையில் உள்ள தொகையில் 70 சதவீதம் அளவுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்டு விட்டதால், பள்ளிக் கல்வித் துறையின் உத்தரவை ஏற்று இலவச சேர்க்கை வழங்குவதாக பள்ளிகள் தெரிவித்துள்ளன.

மேலும், 2022-2023-ஆம் ஆண்டில் வழங்க வேண்டிய 30 சதவீத தொகை, கடந்த கல்வியாண்டுக்கான (2023-2024) நிலுவைத் தொகை ஆகியவற்றை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த சங்கத்தின் பொதுச் செயலர் கே.ஆர்.நந்தகுமார் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை அண்ணா நகர் கிளை
எண்.1742, 18வது மெயின் ரோடு, அண்ணா நகர் (மேற்கு)
சென்னை 600 040 Ph: 044 - 2618 4104/ 2618 2933
E Mail: cb16028@canarabank.com

Canara Bank கனரா வங்கி

கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13(2)) கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்

2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் அனுப்பட்ட கோரிக்கை அறிவிப்பு பத்திரிக்கையின் வாயிலாக வெளியிடப்படுகிறது.

பெறுநர்:

கடன்தாரர்: கன்னியப்பன் ராஜசேகர், S/o.**கன்னியப்பன்,** ஃப்ளாட் எண்.S3, **2வது தளம்,** DAC பியர்ல்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், எண்.3/5, திபஞ்சியம்மாள் கோயில் தெரு, பொழிச்சலூர், சென்னை-600074

அன்புடையீர்,

பொருள்: 2002-ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)-ன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு.

2002-ஆம் ஆண்டின் பிணைக்காப்பு நிதிச்சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம், 2002 மற்றும் பிணைகாப்பு (செயலாக்க) விதிகள் 2002-ன் (Securitisation & Reconstruction of Financial Assets & Enforcement of security interest Act 2002 and Security interest (Enforcement) rules 2002) (இனி சட்டம் என்றே அழைக்கப்படும்) **கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கனரா வங்கி, சென்னை அண்ணா நகர் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி** கீழ்க்கண்ட அறிவிப்பினை தங்களுக்கு வெளியிடுகிறார்.

கன்னியப்பன் ராஜசேகர் (இனி கடன்தாரர் என்று அழைக்கப்படுவர்) தாங்கள், ஷெட்யூல் A-ல் முழு விவரமாக விவரிக்கப்பட்டபடி சொத்தினை கனரா வங்கியில் அடமானம் வைத்து வங்கியின் கடன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தாங்கள் அதற்கான பத்திரங்களை எங்கள் பெயரில் ஈடு செய்து பல்வேறு கடன் வசதிகளை பெற்றுக் கொண்டீர்கள். தாங்கள் கடன் உதவி பெறும் சமயம் வங்கியால் வரையறுக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தாங்கள் பெற்றுக்கொண்ட கடன் தொகைக்காக ஒப்பந்தப்படி கையொப்பமிட்டு பெற்றுக்கொண்டு கடனை முழுமையாக அடைக்கவும் பொறுப்பேற்றுக் கொண்டீர்கள்.

தாங்கள் **ஷெட்யூல் B-ல்** முழு விபரமாக விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கியில் பெற்ற கடனுக்காக, ஈடுசெய்து வங்கிக்கு ஒப்பந்தம் செய்து கையொப்பமிட்டுள்ளீர்கள்.

ஷெட்யூல்-A: கடன்தாரரால் பெறப்பட்ட கடன் வசதியின் விவரங்கள்:

வ.எண்.	கடன் கணக்கு எண்	கடன் வசதி / தொகை	கடன்பெற்ற தேதி	கடன் தொகை
1.	160001279768	Housing Loan	13.12.2022	₹ 45,00,000/-
2.	164002924461	Home Loan Secure	16.12.2022	₹ 2,38,079/-

மேலே குறிப்பிட்டுள்ள கடனுக்காக இந்த கோரிக்கை அறிவிப்பு ஷெட்யூலில் முழுவிவரமாக விவரிக்கப்பட்ட சொத்தினை கனரா வங்கியில் அடமானம் வைத்து வங்கியின் கடன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தாங்கள் அதற்கான பத்திரங்களை எங்கள் பெயரில் ஈடு செய்து கடன் பெற்றுக்கொண்டீர்கள். வங்கியால் வரையறுக்கப்பட்ட எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தாங்கள் பெற்றுக்கொண்ட கடன் தொகையை ஒப்பந்தப்படி திருப்பி செலுத்த தவறிவிட்டபடியால் வங்கியானது தங்கள் கடன் கணக்கினை **12.03.2024** தேதியன்று வாராக்கடன் (NPA) என்று வகைப்படுத்தி மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பினை தங்களுக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள கடன் தொகைகளான 13.03.2024 அன்றுள்ளபடி ₹ **48,32,052.68** (ரூபாய் நாற்பத்தெட்டு லட்சத்து முப்பத்திரண்டாயிரத்து ஐம்பத்திரண்டு மற்றும் பைசா அறுபத்தெட்டு மட்டும்) மேலும் அதன் மீதான வட்டி, இதர செலவினங்களையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் முழுமையான திரும்ப செலுத்தி கடனை முழுமையாக அடைக்க வேண்டும் என்றும் தவறினால் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)-ன் கீழ் உள்ள ஒன்று அல்லது பல்வேறு வழி முறைகளை செயல்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியவும்.

மேலும் சட்டம் பிரிவு 13(13)-ல் குறிப்பிட்டுள்ளபடி வங்கியில் ஈடுசெய்யப்பட்ட ஷெட்யூல் B-ல் விவரிக்கப்பட்ட சொத்துக்கள் மீது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி கடன்தாரரோ / பிணையாளரோ எந்தவிதமான வர்த்தக பரிவர்த்தனை நடவடிக்கை எடுக்க கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. மேற்சொன்ன சட்டம்/அல்லது வேறு ஏதாவது சட்டத்தின்கீழ் வங்கிக்கு உள்ள உரிமைகளுக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் கீழ் கடனுக்காக வங்கிக்கு ஈடுசெய்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மீட்டுக் கொள்ள முடியும் என்பதனை கடன்தாரர் கவனத்தில் கொள்ளவும்.

உங்களுக்கு பதிவுத் தபால் / கூரியர் மூலம் இந்த கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது.

ஷெட்யூல்-B (சொத்து விவரம்): மூலபத்திரதாரர் பெயர்: Mr.கன்னியப்பன் ராஜசேகர். தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பம்பல் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, O.S.எண்.20/1, பழைய பட்டா எண்.20/1B படி & புதிய பட்டா எண்.3167 படி, N.S.எண்.20/11, **பொழிச்சலூர் கிராமம்,** ராகவேந்திரா நகர், 2வது தெரு, தரை மற்றும் முதல் தளம், பொழிச்சலூர், **பல்லாவரம் தாலுகா, முன்னாள் காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு** எண்ணும் முகவரியில் **1210 சதுர அடி நிலம் அதிலுள்ள 1345.50 சதுர அடி கட்டிடம்,** அதனுடன் இணைந்த துணிமுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 24 அடி அகல ரோடு, தெற்கு: பொன்னுரங்கம் நகர், கிழக்கு: காலி நிலம், மேற்கு: Mr.ஹரிகிருஷ்ணன் நிலம்.

ஷெட்யூல்-C: 13.03.2024 அன்றுள்ளபடி நேரடி கடன் விவரங்கள்

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன் வசதி / தொகை	13.03.2024 அன்றுள்ளபடி கடன்தொகை வட்டியுடன்	வட்டி விகிதம்
1.	160001279768	Housing Loan	₹ 46,02,613.68	11.20%
2.	164002924461	Home Loan Secure	₹ 2,29,439/-	11.50%

தேதி: 15.03.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

IDBI BANK
CIN - L65190MH2004GOI148838

ஐடிபிஐ வங்கி லிமிடெட்
முடிச்சூர் கிளை - எண். 3, முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், சென்னை - 600063.

ஐடிபிஐ வங்கி லிமிடெட் - தங்க நகைகள் ஏல அறிவிப்பு

கீழ்கண்ட விவரங்களின்படி தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகைகளை திருப்பி செலுத்தாத காரணத்தினால், கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை பொது ஏலத்தில் விட முடிவெடுக்கப்பட்டுள்ளது. பொது ஏலம் **30.04.2024 (செவ்வாய்)** அன்று மாலை 4 மணிக்கு, ஐடிபிஐ வங்கி, முடிச்சூர் கிளை - எண். 3, முடிச்சூர் சாலை, பழைய பெருங்களத்தூர், சென்னை - 600063. கிளையில் நடைபெறும். ஏலம் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

வ எண்	கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	கணக்கு எண்	மொத்த எடை	கடன் தேதி கடன் தொகை
1	D.சுபாஷ் சந்திர போஸ் த/பெ. தனசேகர்	13446711 00059893	10.30 கிராம்	27.02.2023 ₹ 30,000/- + வட்டி

தேதி : 22.04.2024 அதிகாரப்பூர்வ அதிகாரி, ஐடிபிஐ வங்கி லிட், முடிச்சூர் கிளை

இந்தியன் வங்கி Indian Bank
அலகாபாத் ALLAHABAD

கார்பொரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
(தொலைபேசி : 044-2813 4698/4484;
மின்னஞ்சல் : investors@indianbank.co.in)

அறிவிப்பு

இந்தியன் வங்கியின் பங்குதாரர்களின் கனிவான கவனத்திற்கு

பேங்கிங் கம்பெனிகள் (அக்குயிசிஷன் அண்ட் டிரான்ஸ்ஃபர் ஆஃப் அன்டர்டேக்கிங்ஸ்) சட்டம் 1970-ன் பிரிவு 10B-ல் உள்ள (திருத்தப்பட்ட) விதிகளின்படி வங்கியின் டிவைடன்ட் கணக்குகளின் கீழ் 7 ஆண்டு காலத்துக்கு வழங்கப்படாமல் இருக்கும் தொகை, வழங்கப்படாத டிவைடன்ட் கணக்குக்கு மாற்றப்பட்ட தேதியிலிருந்து மத்திய அரசின் கம்பெனிகள் சட்டம் 1956/2013. பிரிவு 205C/125-ன் கீழ் நிறுவப்பட்ட இன்வெஸ்டர் எஜுகேஷன் அண்டு ப்ரொட்டக்ஷன் ஃபண்ட்-க்கு (IEPF-Investor Education and Protection Fund) மாற்றப்பட வேண்டும். இதன்படி, இந்தியன் வங்கி அறிவித்த நிதியாண்டு 2016-17 (இடைக்காலம்) கோரப்படாத மற்றும் வழங்கப்படாத டிவைடன்ட் தொகை **ஆகஸ்ட் 2024**-ல் IEPF-க்கு மாற்றப்பட உள்ளது.

இந்தியன் வங்கியின் வழங்கப்படாத டிவைடன்ட் தொகைகளைக் குறித்த முழு விவரங்கள் வங்கியின் இணையதளமான www.indianbank.in-ல் பார்க்கலாம்.

நிதியாண்டு 2016-17 (இடைக்காலம்)-க்கான தமது டிவைடன்ட் வாரண்டுகளை பணமாக மாற்றாமல் இருக்கும் இந்தியன் வங்கியின் பங்குதாரர்கள், **ஜூலை 12, 2024-க்குள்** முறைப்படி கையெழுத்திட்ட எழுத்து மூலமான கோரிக்கையை கேன்சல் செய்யப்பட்ட ஒரு காசோலையுடன் சேர்த்து வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற ஏஜெண்ட் (RTA) ஆன M/s. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிட்-க்கு investor@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது கம்பெனி செக்ரெட்டரி, இந்தியன் வங்கி, கார்ப்பரேட் ஆஃபீஸ், சென்னை-க்கு investors@indianbank.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அந்த கோரிக்கை கடிதத்தில் இந்தியன் வங்கியின் பங்குதாரர்கள் தமது கணக்கேடு எண் (Folio No. / DP ID) மற்றும் வாடிக்கையாளர் ஐடி எண் (Client ID) ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

கவனிக்கவும் : கோரப்படாத மற்றும் வழங்கப்படாத டிவைடன்ட் தொகையானது மேற்குறிப்பிட்டபடி இன்வெஸ்டர் எஜுகேஷன் அண்டு ப்ரொட்டக்ஷன் ஃபண்ட் (IEPF)-க்கு மாற்றப்பட்ட பின்பு பங்குதாரர்கள் / கோரிக்கையாளர்கள் வங்கியில் அல்லது RTA ஆஃபீசில் நேரடியாக கொடுக்கும் கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.

இடம் : சென்னை
தேதி : 22.04.2024

தினா நாத் குமார்
துணை பொது மேலாளர் &
கம்பெனி செக்ரட்டரி

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஇஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-என் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிடிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அஸெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்" மற்றும் "இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து வைப்பு தேதி	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	17.04.2024 அன்று பஜு மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. ஆர் ஏ ராமசாமி 2. ரோஸி ஆர் 3. ஸ்ரீ சாய்தா டிரேடர்ஸ் (அதன் உரிமையாளர் ஏ ராமசாமி மூலம்)	ஷெபானில் கமலம் என அழைக்கப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஃபிளாட் எண். ஜி1, 1008 சதுர அடி பரப்பு, 502 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்குடன் மூடப்பட்ட கார் பார்க்கிங்குடன் மிட் அப் ஏரியா-ல் அமைந்துள்ள அஸையா சொத்து. இந்த சொத்து சாய் கணேஷ் நகர் பகுதி ஐடி இல் அமைந்துள்ள 2184 சதுர அடி நிலம். இந்த சொத்து சர்வே எண்2, சர்வே எண். 189/1, பட்டா எண். 955, புதிய பட்டா எண். 2399, புதிய பட்டா சர்வே எண். 189/9 இன் படி, 128 ஜல்லடியன்பேட்டை கிராமம், சோளிங்கநல்லூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை எல்லை வரம்புக்குள் அமைந்துள்ளது மற்றும் இதன் எல்லைகள்	H1843418 07191143 40/ H1843418 07191143 40L/ H1843418 07191143 40G	2 நவம்பர் 2023	₹3,04,371	₹53,51,054	₹30,43,710	07-05-2024	13-05-2024 காலை 10 மணி முதல் மாலை